# கோலியாத்
# பக்தியின்மையின்
# கேடுபாடான தன்மை

## (17:1-54)

*கிரேக்கப் புராணக் கதைகளின் மாபெரும் நாயகர்களில் ஆச்சில்லெஸ் என்பவனும் ஒருவனாவான். இவன் கிரேக்க நாடு ட்ராய் நகரைத் தோல்வியடையச் செய்த ட்ரேஜன் யுத்தத்தில் பெரும் பங்கு வகித்தான். இவனை ஹோமர் என்பவர் தனது இலியட் என்ற காவியத்தில் விவரித்தார். இவன் பிறந்ததும் உடனே இவன் தாய் இவனது உடலைத் துன்பத்திலிருந்து பாதுகாப்பதற்காக ஸ்டைக்ஸ் நதியில் முழுக் காட்டினாள். ஆனால் இவனது குதிங்கால்களைப் பிடித்தபடி அவள் இவனை முழுக்காட்டியதால் இவனது உடலின் அந்தப் பாகத்தைத் தண்ணீர் தொடவில்லை, இதன் விளைவாக இவன் ஊறுபடக் கூடிய பாகமாய் அது இருந்தது. ட்ரேஜன் யுத்தத்தின் போது, ஆச்சில்லெஸின் விரோதியான பாரிஸ் என்பவனால் எய்யப்பட்ட விஷம் தோய்ந்த அம்பானது இவனது குதிக்காலில் பாய்ந்தது. அந்தக் காயத்தினால் ஆச்சில்லெஸ் இறந்து போனான்.*

*ஆச்சில்லெஸின் இந்தச் சித்தரிப்பும் வெற்றி கொள்ளப்பட முடியாதவன் என்பதாக அவன் காணப்படுதலும் தேவபக்தியின்மைக்கு - அதாவது, தேவனுக்கு, வேதாகமத்திற்கு, சபைக்கு, மற்றும் கிறிஸ்தவத் தன்மையுள்ள யாவற்றுக்கும் எதிர்த்து நிற்குதலுக்கு - தகுதியான ஒரு விவரிப்பாக உள்ளது. பக்தியின்மையின் ஏளனமும் இகழ்ச்சியும் வெற்றி கொள்ளப்பட முடியாததாகக் காணப்படுகின்றது, ஆனால் உண்மையில் அவைகள் ஒரு பரிதாபகரமான ஊறுகொள்ளும் தன்மையைக் கொண்டுள்ளன.*

*1 சாமுவேல் 17ல், பக்தியின்மையின் ஊறுகொள்ளும் தன்மைக்கான மிக உயர்ந்த விவரிப்பு ஒன்றுள்ளது. நமக்கு காத் ஊரானாகிய கோலியாத் அறிமுகப்படுத்தப் படுகின்றான். பக்தியின்மையின் ஒவ்வொரு அம்சத்தை யும் இவன் நபர்த்துவப்படுத்தினான். இவன் வீணனாக, தேவனற்றவனாக, மனிதப் பண்பற்றவனாக, மற்றும் சுயத்திற்கு ஊழியம் செய்பவனாக இருந்தான். இந்த அதிகாரத்தில், பக்தியின்மையைப் பற்றிய திகைப்பூட்டும் பாடம் ஒன்று மேல் எழும்புகின்றது.*

மிக்மாஸில் பெலிஸ்தரின் தோல்வி, சவுலின் ஆட்சி முழுவதிலும் இருந்த போராட்டங்களின் வரிசை ஒன்றைத் தொடங்கி வைத்தது (14:52). 1 சாமுவேல் 17ல், இந்த யுத்தத்தின் போது மிகவும் முக்கியமான போர்களில் ஒன்று போரிடப்பட்டது. ஏலாவின் சமவெளியில் இஸ்ரவேலர்கள் பெலிஸ்தரை எதிர் கொண்டார்கள். இயற்கை அமைப்பு இந்தப் போரைத் தனிச் சிறப்பு வாய்ந்ததாக்கிற்று. அந்தப் பள்ளத்தாக்கு சுமார் ஒரு மைல் அகலம் கொண்டதாயிருந்தது. அதன் மத்தியில், மண்ணரிப்பு ஏற்பட்டிருந்த படியினால் இருபதடி அகலமும் பன்னிரெண்டடி ஆழமும் கொண்ட இடுக்கு ஒன்று ஏற்பட்டிருந்தது. கோடைக்காலத்தில் அந்த இடுக்கின் அடிப்பகுதியில் ஒரு சிறிய ஓடையொன்று ஓடும், அதில் தண்ணீரினால் தேய்க்கப்பட்ட உருண்டை வடிவமான கூழாங்கற்கள் நிறைந்திருக்கும். அந்தப் பள்ளத்தாக்கின் அசாதாரணமான வடிவமைப்பு இரு பக்கங்களிலும் இருக்கும் படைகள் ஒன்றையொன்று தாக்குவதைச் சாத்தியமற்றதாக்கி யிருந்தது, ஏனென்றால் தாக்கும் படையானது அந்த இடுக்கின் எதிர்க் கரையில் ஏறும் பொழுதே கொல்லப்பட்டு விடும். ஒருவர் இன்னொருவரை எதிர்த்துப் போரிடுதல் என்பது மட்டும்தான் ஒரே பதிலாயிருந்தது. அந்த இடுக்கின் இரு புறங்களிலும் இரண்டு படைகளும் நாற்பது நாட்கள் அளவாக நின்று கொண்டிருந்தன, அவை கோலியாத்தின் அறைகூவலைக் கேட்டு ஓய்ந்து போயிருந்தன. இது தினமும் இரண்டு வேளைகள் நடைபெற்று வந்தது (17:16).

படையினருக்குத் தேவையான உணவுப்பொருட்கள் ஒவ்வொரு படைவீரரின் இல்லத்திலிருந்தும் கொடுக்கப்பட்டு வந்தது, இங்குதான் இளைஞனாயிருந்த தாவீது காட்சிக்குள் பிரவேசித்தார். தாவீது அநேகமாக பதினெட்டு வயதுடையவராக, படை ஊழியத்திற்கு மிகவும் இளையவராக இருந்தார் (எண். 1:3). அவர் “இளைஞர்” என்று அழைக்கப்பட்டார் (17:58), இவ்வார்த்தை, திருமண வயதில் முழு வளர்ச்சியடைந்த வாலிபரைக் குறிக்கின்றது. அவர் ஈசாயினால், தமது மூன்று சகோதரர்களுக்கு உணவு கொண்டு போகவும், வீட்டுக்குச் செய்திகளைக் கொண்டு வரவும் அனுப்பப் பட்டிருந்தார்.

தாவீதின் இளமை நிறைந்த ஆவலானது அவரை இஸ்ரவேலின் (படை) முகாமினுள் முன்னதாகவே கொண்டு வந்து சேர்த்தது (17:20), மற்றும் அவர் அந்த அரக்கனின் அன்றைய தினத்தின் முதல் அறைகூவலைக் கேட்டார். அவர் கோலியாத்தின் அறைகூவலுக்கு பதில் இல்லாத குறைபாட்டைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். கோலியாத்துக்கு எவரொருவரும் பதில் கூறாததைக் கண்டு, யுத்தம் அறிவிக்கப்பட்ட நாற்பத்தியோராவது நாளில், காத்திலிருந்து வந்த அவ்வரக்கனுக்குப் பதில் தரத் தாவீது நடவடிக்கை மேற்கொண்டார். விதிவசமான அந்த நாளில், பக்தியின்மையின் கேடுபாடான தன்மையைக் கண்டறிந்து அழித்துப் போட்ட வகையில், தாவீது தேவனுக்கு மகத்தானதொரு வெற்றியை வென்றார்.

## பக்தியின்மையின் வெறுமையான தற்புகழ்ச்சி

*நாற்பது நாட்கள் அளவாக கோலியாத் வெற்றி கொள்ளப்பட முடியாதவனாகத் தோன்றினான் (17:4 முதல்). அந்த இடுக்கின் இருபுறங் களிலும் கோலியாத், வழக்கற்ற வகையில் "வல்லவனாக" இருந்தான் என்று ஒருமனதாகக் காணப்பட்டான் (17:4, 23). அந்தப் பட்டப் பெயரே போரில் வெற்றியடையப் போகிறவன் என்றுதான் நேரடிப் பொருளில் குறிப்பிட்டது. கோலியாத்தின் பிரசன்னம் மனதில் ஆழப்பதிகின்ற தாயிருந்தது, மற்றும் அதுவே இஸ்ரவேலைப் பயமுறுத்துவதாக இருந்தது என்பது மெய்யான விஷயமாயிருந்தது. அந்த அரக்கன் ஒன்பதடி உயரமிருந்தான்; இவன் இஸ்ரவேலின் சராசரி உயரம் கொண்ட மனிதனைக் காட்டிலும் அதிக உயரமாயிருந்தான். இவன் புகழ்ச்சியற்ற ஆனாக்கியரின் வம்சத்தில் உயிருடன் இருந்த ஒருவனாவான் (எண். 13:28).*

*கோலியாத்தின் உடல்வாகிற்கு அப்பால், இவனது ஆயுதமானது பயங்கரமான காட்சியாய் இருந்தது. இவன் பித்தளைத் தகடுகள் ஒன்றின் மீது மற்றொன்று செதில்கள் போல் அமைத்துச் செய்யப்பட்ட கவச உடை ஒன்றை அணிந்திருந்தான். அது மட்டும் தொன்னூறு கிலோவுக்கு மேல் எடை கொண்டிருந்தது. இவனது காலின் கீழ்ப்பகுதிகள் பித்தளைக் காப்புகளினால் மூடப்பட்டிருந்தன. இவன் தன் முதுகில் வெண்கலத்தினால் செய்யப்பட்ட எறியீட்டியொன்றைச் சுமந்து நின்றான். இவனது ஈட்டி மிகப் பெரியதாயிருந்தது, அதன் தலைப் பகுதி சுமார் பன்னிரெண்டு கிலோ எடையுள்ள இரும்பினால் செய்யப்பட்டதாயிருந்தது. இவன் பித்தளை யினால் செய்யப்பட்ட தலைக் கவசம் ஒன்றை அணிந்திருந்தான், இவனுக்கு முன்னால் பெரிய கவசம் ஒன்று சுமந்து செல்லப்பட்டது.*

*கோலியாத்தின் உடல் தோற்றத்துடன் கூட, இவன் தனது முரட்டு சுபாவத்தினாலும் இஸ்ரவேலைக் கதிகலங்கச் செய்து கொண்டிருந்தான் (17:10). இவனது வார்த்தையினாலேயே இஸ்ரவேல் முழுவதும் பயந்து நடுங்கினார்கள். இதில் மற்றவர்களுக்கு மேலாக நின்று கொண்டிருந்த அதன் அரசரும் உள்ளடங்கினார். கோலியாத் தனது அறைகூவலை விடுத்த ஒவ்வொரு முறையும் அதிபயங்கர உணர்வானது இஸ்ரவேலர்களின் இருதயங்களைத் தாக்கியது.*

*கோலியாத்தின் வெறுமையான இந்தத் தற்புகழ்ச்சியானது, இன்றைய நாட்களில் தேவனுடைய பரிசுத்தவான்களை எதிர்க்கின்ற நவீன கால தேவநம்பிக்கையற்றவர்களின் தற்புகழ்ச்சி போன்றதாகவே உள்ளது. புகழ்ச்சியற்ற வால்ட்டேர், வேதாகமத்தை அரும்பொருள் காட்சிக் கூடங் களில் மட்டுமே காணக் கூடிய நாள் வரையிலும் தான் உயிர் வாழப் போவதாக பெருமை பாராட்டினார். வால்ட்டேரின் இறப்புக்குப் பிறகு, அவரது அச்சகம் வேதாகமத்தை அச்சிட்டு வெளியிட்டது, மற்றும் அவைகள் அனுப்பப்படும் வரைக்கும் அவரது வீட்டிலேயா இருப்பில் வைக்கப்பட்டன! "தி டைம்" என்ற ஆங்கிலப் பத்திரிக்கையின் அக்டோபர் 20, 1980ம் நாளிட்ட இதழில் கார்ல் சாகன் என்பவர், படைப்புக்*

*கொள்கைவாதிகளிடத்தில் தேவனைப் பற்றிய அவர்களின் நம்பிக்கையைப் பற்றி தற்காப்பு வாதம் செய்யும்படி அறைகூவல் விடுத்தார்.[1] அந்த அறைகூவலை எதிர்கொள்வதாக ஒருவர் ஒப்புக் கொண்ட பொழுதோ சாகன் ஒருக்காலும் பதில் கொடுக்கவில்லை![2] சாகனும் அவரைப் போன்ற மற்றவர்களும் தேவன் இருக்கின்றார் என்பதற்கு எதிராகக் கூச்சலிடுகின்றார்கள், ஆனால் கோலியாத்தின் வார்த்தைகளைப் போலவே, இவைகளும் வெறுமையான தற்புகழ்ச்சிகளாகவே உள்ளன!*

*நவீன நம்பிக்கையாளர்கள் கவனம் செலுத்தட்டும். பக்தியின்மை பற்றிப் பெருமை பாராட்டுவதில் பொருளொன்றும் இல்லை (இ.வ. 2 பேது. 2:12, 17-19). வேதவாக்கியங்கள் மிக அருமையான பிரச்சனைகளைக் கொண்டுள்ளதாகச் சிலர் வாதிடுகின்றார்கள், ஆனால் இந்தப் பெருமை பாராட்டுதல்கள் ஒருக்காலும் உண்மையான ஆதாரத்தினால் ஆதரிக்கப்படுவதில்லை! தேவன் இல்லையென்பதும், தேவன் உள்ளார் என்பதை சந்தேகிப்பதுமான அறைகூவல் மிகவும் வல்லமையுள்ளதாகக் காணப்பட்டாலும், கோலியாத்தைப் போலவே பக்தியின்மை என்பது வெறுமையான தற்புகழ்ச்சிகள் நிறைந்ததாகவே இருக்கிறது (17:49, 50).*

## பக்தியின்மையின் தெளிவான கேடுபாடு

*கோலியாத் எவ்வளவுதான் அழிக்கப்பட முடியாதவனாகத் தோன்றி னாலும், முடிவை நிரூபித்த ஆச்சில்லெஸ்ஸின் குதிக்கால் போன்று இவன் ஒரு பலவீனத்தைக் கொண்டிருந்தான். தாவீது கோலியாத்தை சந்திப்பது என்று சவுல் ஒப்புக் கொண்ட உடனே, அவர் (சவுல்) அந்த இளைஞருக்கு (தாவீதுக்கு) தமது ஆயுதங்களைக் கொடுக்க முயற்சி செய்தார் (17:38). அந்த ஆயுதம் என்பது உண்மையில் ஒரு "யுத்த உடையாக", படைவீரர்களால் அணியப்படுகின்ற பாதுகாப்புக் கவசமாக உள்ளது. ஆனால் தாவீது தனது "மேய்ப்பனின் உடையையே" பெரிதும் விரும்பித் தேர்ந்து கொண்டார் (17:40). அவரது கையில் பட்டயம் எதுவும் இருக்கவில்லை; அவர் ஆயுதம் எதையும் தரிக்கவில்லை; கருவி எதையும் கொண்டு செல்லவில்லை. அவர் வைத்திருந்ததெல்லாம் ஒரு எளிய கவண் மட்டுமே. தாவீது தேவன் மேல் கொண்ட விசுவாசம் என்பதே அவனுடைய மாபெரும் ஆயுதமாய் இருந்தது!*

*இரண்டு படையணிகளும் ஏற்கனவே தாங்கள் சாதாரணமாகத் தங்கியிருந்த இடங்களில் ஓய்ந்திருந்தன. அங்கு ஓய்ந்திருக்கையில் அவர்கள், இளைஞனான தாவீது அந்த இடுக்கின் சரிவில் இறங்கி வருவதைக் கண்டார்கள். அந்த ஓடையில் சாந்தம் மற்றும் அமைதியுடன் நின்று அவர் வழுவழுப்பான ஐந்து கற்களைப் பொறுக்கிக் கொண்டார். பிறகு, பெலிஸ்தர் திகைத்து நிற்க, தாவீது அந்த இடுக்கின் மீதேறி, பெலிஸ்தரின் பக்கம் வந்து நின்றார்! கோலியாத் கீழே அமர்ந்திருந்தான் என்பது உறுதி, மற்றும் இவன் தனது அறைகூவலுக்குத் தாவீது பதில் கொடுக்க வந்ததை உணர்ந்தறிந்த போது, எழுந்து அவரை நோக்கி நடந்து சென்று அவரை*

*அச்சுறுத்தி, சபித்தான். தாவீதின் பதில் பயத்தையல்ல, விசுவாசத்தை மட்டுமே காண்பித்தது. ஒரு கல் தேர்ந்து கொள்ளப்பட்டது, தேவனுடைய உதவியினால் அந்த அரக்கன் விழுந்தான், அவனது தலை கொய்யப்பட்டது!*

*நவீனகால மனிதரையும் காத்திலிருந்து வந்த இந்த அரக்கனையும் நூற்றாண்டுகள் பல பிரித்து வைத்திருந்த போதிலும், பக்தியின்மையின் வெறுமையை அழிக்க அதே கூறுகள் ஒன்றிணைகின்றன. கோலியாத்தின் கேடுபாடும் பக்தியின்மையும் பின்வரும் கருத்துக்களில் தெளிவாகின்றன: தேவனை மறுத்து அவரை விரோதித்தல் (17:43, 45); சுயபாதுகாப்பின் மீது நம்பிக்கை வைத்தல் (17:10, 45; எரே. 10:23); எளிய விஷயங்களில் உள்ள அபாயத்தைக் காணத் தவறுதல் (அதாவது, ஒரு கவண், 17:43; இ.வ. 1 கொரி. 1:27); பெருமை மற்றும் முரட்டாட்டம் (17:44; நீதி. 16:18).*

## பக்தியின்மையின் நிறைவான அடைவிடம்

*பக்தியின்மையின் அறைகூவல்களினால் விசுவாசிகள் தொடர்ந்து எதிர்கொள்ளப்படுவார்கள். இது ஆசிரியர்கள், நெருங்கிய நண்பர்கள், உடன் பணி செய்பவர்கள், அல்லது குடும்ப உறுப்பினர்களிடம் இருந்தும் கூட வரலாம். விசுவாசிகள் ஏளனத்தையும் கேள்வி கேட்கப்படுதலையும் எதிர்கொள்ளுவார்கள். சாத்தான் தன் தாக்குதல்களில் ஒருக்காலும் கடுமை தணிந்திருக்க மாட்டான் (2 கொரி. 4:8, 9; 10:3-5). பக்தியின்மையை எதிர்கொள்ளுகின்ற வேளையில் மிக அதிகமான பரிசுத்தவான்கள் சவுல் மற்றும் இஸ்ரவேல் மக்களைப் போலவே கூனிக் குறுகுகின்றார்கள் (17:24). தாவீதைப் போலவே பயத்தை மறுக்கின்ற மிகக்குறைவான பரிசுத்தவான் கள் இருக்கின்றார்கள் (17:36, 48). விசுவாசிகள் உறுதியான விசுவாசத்துடன், பக்தியின்மை என்ற விரோதியை எதிர்த்தால் வெற்றி உறுதி! (17:45-51; யாக். 4:7).*

*பக்தியின்மையுடனான எதிர்ப்பில், நாம் நமது வாழ்வில் வெற்றி யடைய, பின்வருவனவற்றை உய்த்துணர வேண்டும்.*

*முதலாவது, பக்தியின்மை தனது அறைகூவல்கள் வெற்றி முழுக்கம் இடுவது போல் தோன்றச் செய்ய விரும்புகின்றது, மற்றும் அந்த அறைகூவல் கள் நமது இருதயங்களில் பயத்தைத் தூண்டும்படியாகவே வடிவமைக்கப் பட்டுள்ளன (1 தீமோ. 1:7, 8; எபே. 2:6; 3:9; 1 கொரி. 16:13; பிலி. 1:27, 28).*

*இரண்டாவது, நாம் தனியாக நிற்க வேண்டியிருப்பினும் நாம் தேவனுக்கென்று நிற்க வேண்டும்! தாவீது அமைதியாயிருக்கின்ற பெரும்பான்மையினருடன் சேர்ந்திருக்க மறுத்து விட்டார் (17:32). தேவன் அவருடன் இருந்த வரைக்கும், தாவீது யுத்தத்தின் பாரத்தைச் சுமக்க முற்றிலும் தயாராயிருந்தார் (17:37; இ.வ. 1 கொரி. 15:58).*

*மூன்றாவது, பக்தியின்மையின் இகழ்ச்சியையும் முரட்டாட்டத்தையும் வெற்றி கொள்வதற்கு ஒரே வழி, நாம் நமது நம்பிக்கையைத் தேவன் மீது வைப்பதேயாகும் (17:37, 47; இ.வ. சங். 27:1; 35:1-7; ஏசா. 65:24; 2 சாமு. 22:1 முதல்; சங். 18:29-35).*

*நான்காவது, உறுதியான மற்றும் சீரான விசுவாசத்துடன் பக்தியின்மை*

*எதிர்கொள்ளப்படுகின்றபோது, அது திரும்பி ஓடிவிடும்! (17:51; மத். 4:11). கீழ்ப்படியாமையின் மூலமாகத் தேவனுடன் சவுல் எல்லா வித இணைப்பு களையும் துண்டித்துக் கொண்டிருந்தபடியினால், அவரால் பக்தி யின்மையை எதிர்கொள்ள இயலாமல் போயிற்று. கோலியாத்தைக் கொல்பவர்களுக்கு ஒரு வாக்குறுதியை அளித்தல் என்பதே சவுலினால் செய்ய முடிந்த எல்லாமுமாயிருந்தது (17:25). ஆனால் நாம், தாவீதைப் போலவே தேவன் மீது விசுவாசமும், சுத்தமான வாழ்க்கையும் கொண்டவர் களாய் பக்தியின்மையை வெற்றிகொள்ளக் கடவோம்! தனது பரலோக பிதாவிடம் விசுவாசம் கொண்டுள்ள தேவனுடைய மிகவும் பெலவீனமான பிள்ளை இந்த உலகத்தை ஜெயிக்கப் போதுமான பெலமுள்ளவரா யிருக்கிறார்! (யோவா. 16:33).*

## *முடிவுரை*

*கோலியாத், நமது காலத்தில் இருக்கின்ற மக்களில் பலருக்கு எவ்விதமாய் முன்னடையாளமாயிருக்கிறான் என்பது திகைப்புக்குரியதாக இருப்பதில்லையா? இவன் பக்தியில்லாதவர்களின் சுருக்கக் குறியீடாயிருக் கின்றான். அந்த யுத்தத்தில் வெற்றியடைய இவன் தவறியது என்பது, கிறிஸ்துவின் வழி மட்டுமே ஒரே வழியாக உள்ளது என்பதை அடையாளப் படுத்துகின்றது! நாம் தாவீதின் உதாரணத்தைப் பயன்படுத்தி பக்தி யின்மையை வெற்றி கொள்ளக் கடவோம்.*

*கிரீன் மௌன்ட்டன் பாய்ஸ் என்ற இயக்கத்தின் தலைவராயிருந்த கர்னல் ஈத்தான் ஆலென் என்பவர் கெட்ட பெயரும் தேவநம்பிக்கை யின்மையும் கொண்டிருந்தார். அவரது மனைவி பக்தியுள்ள பெண்ணா யிருந்து தங்கள் மகளுக்கு சுவிசேஷத்தைப் போதித்து வந்தார். அந்த மகள் சுகவீனம் அடைந்தாள், அவளது தந்தைக்கு அவள் இறக்கும் வேளையில் கூறிய பின்வரும் வார்த்தைகளைக் கேட்கும்படிக்குத் தகவல் அனுப்பப் பட்டது: "அப்பா, நான் இறக்கப் போகின்றேன். நான், நீங்கள் போதித்த கொள்கைகளையா அல்லது அம்மா போதித்த கொள்கைகளையா, எதை விசுவாசிக்கட்டும்?'' அவர் தமது உணர்வுகளை ஆதாயப்படுத்திக் கொள்வதற்கு சற்று நேரம் எடுத்துக் கொண்ட பிறகு, "உன் தாய் உனக்குப் போதித்தவற்றை நீ விசுவாசி" என்று பதில் அளித்தார். பக்தியின்மையின் கேடுபாடு தெளிவானதாக உள்ளது. சுவிசேஷத்தின் கட்டளைகளுக்கு எவரொருவரும் எவ்வாறு கீழ்ப்படிய மறுக்கக் கூடும்?*

---

*குறிப்புகள்*

[1]Frederic Golden, "The Cosmic Explainer'', *Time*, 20 October 1980, p. 63. [2]Thomas B. Warren, "Will Prof. Carl Sagan Face Up to an Acceptance of His 'Open Challenge' to Biblical Creationists?'' *Spiritual Sword,* October, 1981, pp. 28-31.